உளி 1 | ஓசை 40 | ஜூன் - 2020 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



**ஆசிரியர் :**
ஜின்னா அஸ்மி

**நிர்வாகக் குழு :**
சகா (சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்

**ஆசிரியர் குழு :**
படைப்பு தேர்வுக்குழுமம்

**வடிவமைப்பு :**
முகம்மது புலவர் மீரான்

**முகப்பு ஓவியம் :**
அருண் குமார்

**இணையதள முகவரி :**
www.padaippu.com

**அலுவலக முகவரி :**
படைப்பு குழுமம்
அரசு பதிவெண்: 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர்,
தமிழ்நாடு,
இந்தியா.
607002
admin@padaippu.com
9469375575



படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

| | |
|---|---|
| வினோதன் | - 4 |
| தங்கேஸ் | - 5 |
| சுரேஷ்பாபு ராசேந்திரன் | - 5 |
| ரா.தீர்க்கதரிசனன் | - 6 |
| சசிகலா திருமால் | - 6 |
| வசந்தன் | - 7 |
| சே.தண்டபாணி தென்றல் | - 7 |
| ஜெயாபுதீன் | - 8 |
| சந்துரு | - 9 |
| கோ.ஸ்ரீதரன் | - 10 |
| தக்ஷன் | - 10 |
| கா.இலட்சுமணன் | - 11 |
| கதிர் அவன் | - 12 |
| சுப.முத்துக்குமார் | - 13 |
| தமிழ்மணவாளன் | - 13 |
| சு.கேசவன் | - 14 |
| மதுசூதன் | - 14 |
| சுயம்பு | - 15 |
| மா.காளிதாஸ் | - 15 |
| யாழ் தண்விகா | - 16 |
| வளவன் கரிகாலன் | - 17 |
| ரா.ராஜசேகர் | - 17 |
| சிவா முத்துக்குமரன் | - 18 |
| கூடல் தாரிக் | - 19 |
| மு.பெ.சத்தியநேசன் | - 20 |
| சகா | - 21 |
| மதுரா | - 22 |
| மின்மினி விமலா | - 22 |
| சௌவி | - 23 |
| ராஜிலா ரிஜ்வான் | - 24 |
| அம்பிகா குமரன் | - 24 |
| அன்றிலன் | - 25 |
| பிறைநிலா | - 26 |
| கதிரவன் வீ | - 27 |
| தி.கலையரசி | - 28 |
| விஜய் ஆனந்த் | - 28 |
| முகமது பாட்சா | - 29 |
| ஆனந்த் | - 29 |
| சுஜய் ரகு | - 30 |
| க.ராஜகுமாரன் | - 31 |
| நுஆல் பாத்திமா | - 31 |
| பெனடிக் அருள் | - 32 |
| கோ.வசந்தகுமாரன் | - 32 |
| காயத்ரி | - 32 |
| பரமேஸ்வரி சண்முகம் | - 33 |
| ப.தனஞ்ஜெயன் | - 33 |
| இந்திரன் | - 34 |
| மிஸ்ரா ஜப்பார் | - 35 |
| சுப்ரா | - 35 |
| வே.மு.ஜெயந்தன் | - 36 |
| கலை | - 37 |
| முனியாண்டி ராஜ் | - 38 |
| ம.கனகராஜன் | - 38 |
| ஜே.ஜே.அனிட்டா | - 39 |



ஒரு கண்ணீர்த்துளி
என்ன செய்துவிடும்
என்றெல்லாம்
நினைக்காதீர்கள் !

போர்வைக்குள் புகுந்து
இமைகளைக் கடந்து
தூக்கத்தை கிழிக்கும் !

குருதிச் சூடேற்றி
இருதயக்கூட்டில்
இருள் கூட்டும் !

சிந்தனையின்
சினை முட்டையை
ஓங்கி அடிக்கும் !

கண்களுக்குள்
கந்தக வாசத்தை
கல்லாக்கி வீசும் !

மனச் சீசாவின்
மடியின் மீதேறி
மலையாகி நடக்கும் !

இவற்றை உணர
நீங்கள் துடைக்கும்
தொலைவிலெல்லாம்
அந்த கண்ணீர்
வழிய வேண்டிய
அவசியமேயில்லை !

தீர்வும், அடையாளமுமற்ற
வலிகளை உணர்தல்
ஒரு பெருஞ்சாபம் !

➤ *வினோதன்*

நதியில் மிதக்கும் நிலாப்பூவை
முத்தமிடச் சென்றது
நதிக்குள் விழுந்து தத்தளித்துக்கொண்டிருக்கிறது
நனைந்த பின்பு சிறகுகள்
வெறும் காகிதகூழ்கள் தானே
நதிப்படுகைக்குள் எத்தனை எத்தனை
வண்ணத்துப்பூச்சிகளின் ஜீவ சமாதிகளோ ?
கரையோர மணலில் வெறித்துக்கிடக்கும்
சிறகுகளை தேடிப்பார்க்கவேண்டும்
வேடிக்கை பார்க்கச் சென்றவன்
நதி தீண்டும் ஆசையில்
இடுப்பில் கயிறை கட்டியபடி
உள்ளிறங்கிய கணம்
பாதத்தை முத்தமிட வந்த மீனொன்று
அவசராமாக விலகிப்போய்விட்டது
கால்களுக்கு கீழே மணல் திட்டைகள்
உருண்டோடிக்கொண்டிருக்கின்றன

➤ *தங்கேஸ்*



யாதெனில்
எச்சத்தின்
சிதறல்களில்
பெருவனங்களை
பிரசவிப்பதைப் போன்று
அத்தனை எளிதல்ல..
ஒரு தாய்பறவையின்
முட்டையிடும்
பேறுகால வலியென்பது.

➤ *சுரேஷ்பாபு ராசேந்திரன்*

## அரிவாள் முனைக் கோபம்



வெயில் மேயும் கட்டாந்தரைப்
பன மரங்களுக்கு நடுவே
அவசரமின்றி அமர்ந்திருக்கும்
அய்யனார் சிலையொட்டிய ஓடையில்
நிகழ்ந்தது
அந்தப் பிள்ளையின் மீதான வன்மம்.
வரும் திருவிழாவிற்குச் சாத்துப்போகும்
அய்யனாரின் அரிவாளுக்கு
மேலும் மேலும் கூர்தீட்டுகிறேன்
அடங்காக் கோவத்தோடு....

➤ ரா. தீர்க்கதரிசனன்

நிராகரிப்பை விட
நிராகரிப்பதற்காய் சொல்லப்படும்
வலிமையற்ற காரணங்களே
மிகுந்த வலியைத் தருகிறது...
வலிகளினூடே வாழ்க்கை
பழகிவிட்ட ஒன்றுதான் என்றாலும்
ஒவ்வொரு முறையும்
நிராகரிப்பின் வலி மட்டும்
நீண்டுகொண்டேயிருக்கிறது...
பொதுவில் இயல்பாய் இருப்பதாய்
நடித்தாலும்
தனிமையைத் தேடிப்பிடித்து
இருகரங்கள் கொண்டு
வாயை இறுக்கி மூடி
அழுகையின் மூலம் கூட
வலியை வெளியேற்றி விடாமல்
மீண்டும் உள்ளுக்குள்ளேயே
திணித்திடும் ரணம்
மீண்டும் ஒருமுறை வேண்டவே வேண்டாம்....
அன்பைக் கொடுத்து
அழுகையை பரிசாகப் பெறுவதில்
என்ன இருந்துவிடப் போகிறது
மீளமுடியா துயரம் ஒன்றைத் தவிர....
அன்பு எப்போதுமே
அனாதையாக்கப்படுகிறது.....

➤ சசிகலா திருமால்

**வான்காவின் தகனமஞ்சள்**

கருக்கலில் எழுந்து சாளரத்தை திறந்தேன்
காகிதக் கப்பல்கள் அங்குமிங்குமாய்

சுவை நரம்புகள் இற்றுப்போன நாவிற்கு
அறுசுவை பானம் ஒன்று
தீர்த்தக் குடுவையில் கொண்டுவந்தாள்
வலி அறிந்தவள்

கப்பல்களில் பானத்தை நிரப்பினேன்
கண்ணீரைக் குடுவையில் நிரப்பினேன்

மூழ்கிக்கொண்டிருந்தனர்
போதைக்கு உவமையாகிப்போன
ஆரம்பூசிய
முப்பாட்டன்கள்.

➤ *வசந்தன்*



குவாட்டர் பாட்டிலின்
பின்னணியில்
ஒளிரும் வானவில்லை
செவ்வகம் செவ்வகமாக
பெயர்த்தெடுத்து
நாசமாய்ப் போவதின்
பரப்பளவை சுற்றவுக்குத் திருகித் திருகி
வளைந்துபோன கரங்களைக் காம்பஸாக்கி
காலை ஊன்ற முயற்சித்துக்
கொண்டிருந்தார்கள்
தேர்வும் பேப்பரும்
வீட்டிலிருக்கும்
மகளிடமிருந்தது

➤ *சே தண்டபாணி தென்றல்*



திருமணப் பரிசாய் வந்த
எவர்சில்வர் சம்புடத்தில்
கொத்தியிருந்த
பெயரின் மீதேறி
கால்நூற்றாண்டுக்கு முன்னால்
போய்இறங்கிவிட்டாள்
அம்மா.

அங்கிருந்த
அத்தையின் ஞாபகங்களை
கண்ணீராகவும்
தன் திருமணக் குதூகலத்தை
வெட்கமாகவும்
ஆக்கிக் கலந்த
முகத்துடன்
அப்பாவின் புகைப்படத்தை
உற்றுப் பார்க்கிறாள்
அம்மா.

பெயர்கள் பொறித்த
வேறு பாத்திரங்கள்
வேறு காலங்களுக்குள்
கொண்டுபோகும்
சுரங்க வழிகளாகின்றன.

உறவினர்களின் பெயர்களற்ற
புதுவீட்டின்
நாகரீகமடைந்த மருமகளின்
புதிய பாத்திரங்களுடன்
ஒட்ட மறுக்கிறாள் அம்மா.

மொட்டைமாடியில் கோணிச்சாக்குக்குள்
உச்சி வெயிலில் கிடக்கும்
பழைய பாத்திரங்களில் பொறித்த
உறவுகளின் பெயர்களாய்
தகித்துக் கிடக்கிறாள் அம்மா.

➤ ஜெயாபுதீன்

## அதிகமாய் வேண்டுவது



களைத்துறங்கும்
குழந்தைகளில்
கணவன் ஒன்றையும்
மனைவி மற்றொன்றையும்
தோள் சுமந்து
வெடித்த பாதங்களுடன்
நீண்ட வீதியில்
நெடு நேரம் நடக்கின்றனர்...

கசியும் கண்ணீர் மறைத்து
கருணையுள்ளோர் தருவதை
கூச்சத்துடன் பெற்றுக்கொண்டு
பாதங்களால் உலகளந்து செல்லும்
அவர்களுக்கு
மனித வாசமில்லாத
அதிகாலைகள்
போதுமாயிருக்கிறது
நெடுஞ்சாலைகளின் ஓரம்
காலைக்கடன்களை
கழித்துக்கொள்ள...
வெயில் ஏறிய பிறகு
குழந்தைகளுக்கு
தண்ணீருக்கு பதில்
காகிதங்களே
தற்காலிகத் தீர்வாகிறது...!
தாங்கள் கைவிடப்பட்டிருப்பதை
தெளிவாய் தெரிந்துகொண்டிருக்கும்
அவர்களுக்கு
இன்னும் எத்தனை நாட்கள் நடப்பதென்பதுதான்
முடிவாய்த் தெரியவில்லை...
வழி நடைகளில்
அரிதாய் எங்கேனும்
தண்ணீரும் சொற்ப உணவும்
தந்தாலே போதும்
தோள் சுமந்த பிள்ளைகளுடன்
ஊரடைந்து விடலாமென்று
நம்பிக்கையுடன் நடக்கும்
அந்தத் தாய்
இப்போது அதிகமாய்
வேண்டிக்கொள்வதெல்லாம்
ஊர்ப்போய்ச் சேர்வதற்குள்
மனம் தரும் ஆயாசத்தால்
முந்திக்கொண்டு
வந்துவிடக்கூடாது
அந்த மூன்று நாள் துயர்
என்பது மட்டுமே...

➤ *சந்துரு...*

துஷ்டிக்கேக்கபோன வீட்டில்தானா
அவளும் வந்திருக்க வேண்டும்
அவளின் கலைந்த தலையும்
அழுது வீங்கிய கண்களும்
சரிந்த துப்பட்டாவும்
இவ்வளவு ஏன் அவள் சிந்திப்போடும்
நீரும் கூட அத்துணை பின் நவீனம்
எழவு இரைச்சல் வீடும் கூட
வெளிர் மஞ்சள் நிற அமைதியழகு
ஹை டெசிபல் பறை அடி
பீத்தோவனின் சிம்பொனி
சடுதியில் நான் ஷெல்லியாயிருக்கிறேன்
உச்சக்கட்டமாய்
ஐஸ் பெட்டிக்குள்ளிருக்கும்
அந்த மூதாட்டி
மூக்கு பஞ்சோடு
எழுந்தொரு பாலே நடனம்
ஆடுவதாய் தெரிந்து தொலைத்திருக்க
வேண்டாம்தான்.....

➤ கோ.ஸ்ரீதரன்



பெருநகரில் அபூர்வமாக
பார்த்த ஒரேயொரு
குடுகுடுப்பைக்காரனுக்கும்
கிராமத்துக்கோடங்கிக்கும்
மாறியிருக்கவில்லை
எதுவும் பெரியதாக
கையேந்துவது உட்பட

ஒரு வித்தியாசமாய்
அந்நகரின்
மின்சார சுடுகாட்டில்
இரவெல்லாம் இருந்துவிட்டு
வந்ததை தவிர

➤ தக்ஷன்

# மழை தீண்டாத வானம்



வார்த்தைகளற்ற வாழ்க்கையை அதோ அந்த
மழைதான் தொடர்கிறது
குடை பிடிப்பதற்கும் நனையாமல் இருப்பதற்கும்
நடைபோடுகிறது

ஒரு முறை இடிக்கு அப்புறம் உன் குரலைக்
கேட்டிருக்கிறேன்
கூடவே மின்னிய மின்னல் ஒளியில்
மெதுவாய் இமைகளில் என்னை
மீட்டியதையதும் மழைக்குள் சிக்கிய
பறவையாய் சிறகு முளத்தது

சாரள் சிலிர்ப்பில் சிணுங்கிய குழந்தையாய்
நடந்த நடையில் நிகழ்ந்த உரசல்களில்
வெடித்தது  எரிமலை

இறுதியாய் அடர்த்தியான பார்வையை
பார்த்தது அன்று மட்டும்தான்
ஊசியில் நுழையும் நூலைப் போல்
மழை தினங்களில் உன் விழிக்குள்
மாட்டிக்கொண்ட மீனானேன்

கொட்டிய மழையெல்லாம் வாங்கிக்கொண்டு
கருமேகங்கள் இன்னும் கலையாத
வானமாய் தள்ளி வைத்திருக்கிறாய்
என்னை..

- கா. இலட்சுமணன்



சிறிதாக நறுக்கியெடுத்த வெங்காயம்
சிறிதாக வெட்டப்பட்ட தக்காளி
சிறிதாக வெட்டிய பச்சை மிளகாய்
அரைத்து எடுத்த
வெள்ளைப்பூண்டும் இஞ்சியும்
சிறிது கறிவேப்பில்லை
சிறிது கடுகு உளுந்து
தேவையான அளவு உப்பு
ஒரு பாத்திரம்
சிறிது எண்ணெய்
கொஞ்சம் மிளகாய் பொடி
கொஞ்சம் மல்லிப்பொடி
கொஞ்சம் மஞ்சள் பொடி
கொஞ்சம் கறிமசாலா பொடி
அத்தோடு
கொஞ்சம் வேர்வைத்துளிகள்
புகையால் உண்டாகும் கண்ணெரிச்சல்
கொஞ்சம் புலம்பல்
ஒன்றிரண்டு தும்மலோடு இருமல்
பிடித்த பாடல்களின் சில வரிகள்
வெளிப்படுத்திட இயலாத சோகம்
இதழ் தாண்டிட மறுக்கும் மௌனம்
இவையாவும் ஒன்றென கலந்து
இறுதியாக அடுப்பிலிருந்து
இறக்கி வைக்கப்படும்
#சில_அம்மாக்களின்
சமையலென்பது
இதழ் வழி நுழைந்து
தொண்டைக்குழி கடந்து
பெருங்குடல் நிறைத்து
பசியாற்றிடும் பக்குவம் கொண்டது
மட்டுமல்ல அவை முழுதாய் ரசித்து
எழுதப்பட வேண்டிய
#ஆகப்பெரும்_கவிதைகளில்

ஒன்று தான் #என்றறிக ...!

➤ *கதிர் அவன்*

என் கண்களைக் கூர்ந்து பார்க்கிறது யானை
தாங்க முடியாமல்
அதன் கால் சங்கிலியில்
பதுங்கிக் கொள்கிறேன்

➤ *சுப. முத்துக்குமார்*



கண்ணுக்கெட்டிய தூரத்தில்
சென்று
கொண்டிருப்பவர்கள்
யாரென்று தெரியாதெனக்
கெனினும்
பாதையைத் தீர்மானிப்பவர்களாக
நம்பித்தீர வேண்டிய
பெருவனத்தின்அடர் புதர்களின்
நடுவே கீறிவிடப்பட்ட
ஒற்றையடி
விழுங்கும் வாய் புலப்படாத
நீள் அரவமெனப்
பயணத்தைச் செரித்தபடி
வாயிலிருந்து வாலுக்கா
வாலிலிருந்து வாயிற்கா
நடுவிலேயே யூகிக்க வியலாமல்
நடுக்கமும் நம்பிக்கையுமாய்
உறையும் பார்வையில்
அவர்கள்
போய்க் கொண்டிருக்கிறார்கள்
திரும்பிப் பார்க்காமலே.

➤ *தமிழ்மணவாளன்*



மகனுக்கு
பெண் தேடி அலைகிறார்
கள்ளிப்பால் கொடுத்து
பெண் சிசுவை கொன்ற
தந்தை!

➤ *சு.கேசவன்*

காலத்தின் அவசர நகர்வுகளில்
எனக்கு உடன்பாடில்லை.
புழுதி அடர்ந்த மண் சாலையில் புளியம்
பிஞ்சுகள் பறித்துத் திரும்புவதற்குள் பால்யம்
முடிந்து விட்டிருந்தது.
ஆற அமர குளக்கரையில் பிடித்தவளைப்
பற்றி கவிதை சொல்வதற்குள் வாலிபம்
முடிந்திருந்தது.
நடை பழக்க மகளைக் கைப்பிடித்து நடந்து
தெருமுனையில் திரும்பிப்பார்க்கிறேன் மாரில்
நரைத்திருந்தது.
ஒரு மாலையில் சாய்வு நாற்காலியை விரித்து
வைத்திருக்கிறார்கள் ஓய்வெடுக்க...
நகம் கடித்துப் பின்
தேநீர்க் கோப்பையின் பிடிமானத்தை
இறுக்கிப்பிடிப்பதற்கு மேல் எதிர் வினைகள்
எதையும்
காட்டுவதற்கில்லை
காலத்திடம்.

➤ *மதுசூதன்*

கசிந்ததா?
தங்கியதா?
தவறாமல் மாத, மாதம் கேட்கும் அம்மாவிற்கு
மகளும் சொல்லத் தவறுவதேயில்லை,
தன் வீட்டு
ஆடு, மாடு, பூனை, நாய்
ஈனும் குட்டிகளை,,,

➤ சுயம்பு



எதுவுமே அகப்படாத போதும்
வழக்கம் போல வந்து போகின்றன
இரண்டு கொக்குகள்.
தேங்கிய சிறு குழியில்
திதி எள் கரைத்துப் போகிறவனுக்கு
அரும்பு மீசை.
திணறித் திணறித்
திருட்டு மண் இழுத்து நகர்கின்றன
வண்டி மாடுகள்.
பழிக்குப் பழியாக
மறுகரையில் மல்லாந்து கிடக்கிறான் கடைசிக்
கழிவுநீக்கத்தைத் தவறவிட்டவன்.
இருசக்கர வாகனத்தில் சாய்ந்தபடி மரத்தடியில்
தவிப்போடு காத்திருக்கிறது பாதிக் காதல்.
வெளியே தடத்தோடும்
உள்ளே நெருப்போடும்
நதியைப் போல ஓடிக்கொண்டிருக்கும்
இக்கோடையின் புறங்கையை நனைக்கிறது,
வறட்சி நிவாரணத்தில்
எஞ்சிய சிறு துளி.

➤ மா. காளிதாஸ்

## பூனைக்_கடவுள்



பிடிபடினும் நழுவி ஓடும் லாவகத்துடன்
உள்நுழைந்த பூனையின் கூர் கண்கள் சிவப்பு
நிற பல்பின் வெளிச்சத்தை பதட்டமாக்கிச்
சுழற்றியடிக்கும் மின்விசிறியைச் சற்றும்
சலனமின்றிக் கடக்கிறது

கருப்பு நதிக்குள் தடம் பதிக்கும் பூனையின்
பாதங்களும் நாசித் துளையும் காமத்தின்
பின்தொடரும் ரசனைக்குரிய முத்த சுகந்தம்

எங்கோ குரைக்கும் நாயின் சத்தத்தில் முன்
வந்து நிற்கும் பதப்பற்கள்
பூனைக்கு ஒரு அச்சத்தையும்
ஏற்படுத்தாதிருக்கிறது

மின்கம்பத்தின் ஆந்தைக் குரலும்
இரவுப் பூச்சிகளின் சலசலப்பும்
இருள் சுவாசிக்கும் தாலாட்டொலி

ஏகாந்த நிலையில் கிடக்கும் உடல்களின்
விட்டேத்தித்தனம் குறித்த புரிதலற்ற பூனை
சுவாரஸ்யமற்ற தேடலை முடித்துக் கிளம்ப
தெரு விளக்குகள் ஆங்காங்கே அப்படியே
நின்று பார்க்கின்றன

வெயிலேறத் தொடங்கிய பொழுதில்
கடும் அலறலுடன் வீட்டினுள்ளிலிருந்து
எடுத்துவரப்பட்ட உடல்களுடன் மொய்த்து
விழுகின்றன எத்தனையோ பசிக்கதைகள்

இத்தனையையும் தூரத்துச் சந்து முனையில்
நின்று பார்க்கும் பூனைக்கு இன்று இரவும்
பசிக்கும்

➤ *யாழ் தண்விகா*



உள்ளே
நுழைந்ததிலிருந்து
இந்த
அடர்ந்த கானகத்தின்
கதைகளை
ஓய்வில்லாமல்
சொல்லிக்கொண்டே
வருகின்றன
உதிர்ந்து கிடக்கும்
சருகுகள்!

➤ வளவன் கரிகாலன்

நெருப்பு திரவம்
நிழல் அரவம்
நெடிய உருவம்
ஒன்றுடன் ஒன்று பின்னி
குழைந்து இழைந்து
ஒன்றுக்குள் ஒன்று
நுழைந்து கலைந்து
உருவாக்கின
ஓவியச் சிதறல்களை
கைகளற்ற ஓவியனின் மனதில்

வெறிக்கப் பார்த்தவன்
கண்களில் வழிந்தன வண்ணங்கள்
பூனைகள் குளித்தன அதில்

ஈரத்தில் சிலிர்த்துலுக்கியது பூனைகள்

வண்ணமாகியது
வானதேசம் முழுமையும்

வண்ணவண்ண ஆடைகளுடன்
இறந்துபோன கவிஞர்களின் ஆவி

➤ ரா.ராஜசேகர்



கடன் வாங்கி நூல்
வாங்கி இருக்கிறேன்
நூலையும் கடன் வாங்கி இருக்கிறேன்
இதுவரையில் இரண்டையும்
திருப்பி தர முடியவில்லை

என்
கடனே நூல் வாசித்தல்தான்
கடனே என வாசித்தது இல்லை

காலம் கடனாய் தந்த
வாழ்வில்
புத்தகங்களுக்கு நான்
நன்றி கடன் பற்றிருக்கிறேன்


அடுத்த பிறவியில் இருக்க வேண்டும்
புத்தக பக்கத்தில்
பத்திரப்படுத்தும்
மயிலிறகாய்

வாழ்க்கை என்னை கிழித்து எறியும் போது
நூல் கொண்டு
தைத்து கொள்கிறேன்....

புத்தக பக்கத்தில்
இருக்கும் போதும்
பக்கத்தில் புத்தகம் இருக்கும் போதும்
பக்கத்தில் யாருமில்லை
என்ற நினைவு எழுந்ததில்லை...

துயரங்களில் சாய்ந்து கொண்டது
தோள்களில் அல்ல
தாள்களில் ....

➤ *சிவா முத்துக்குமரன்*



துயரம் குறித்த
வரைபடப்போட்டியில்
முதல்பரிசு பெறுகிறான்
ரொட்டியை வரைந்த ஓவியன்

ஒற்றை ரொட்டியை
சுற்றி வட்டமிடும்
எறும்புகள் அனைத்துக்கும்
மனிதர்களின் சாயல்

சூடு பொறுக்காமல்
சாலையில் கதறியோடும்
சிறுவன் நினைவூட்டுகிறான்
காய்ந்து போன ரொட்டித்துண்டினை

நம்பியவர்களைக்கைவிடாத
ரொட்டித்துண்டுகள்
தண்டவாளங்களுக்கு இடையில்
சிதறிக்கிடக்கின்றன


ரொட்டி என்பது
வட்ட வடிவத்துயரமென்பதை
சொல்லாமல் சொல்கிறார்கள்
கால்கடுக்க நடப்பவர்கள்.

➤ *ஜடீல் தாரிக்*



அந்த அநாதை இரவின்
நிலா எரியும் ஏகாந்தத்தில்
உன் நினைவுகளின் சூட்டில்
எரிந்து கொண்டிருக்கிறது
எனது ஏக்கத்தின் மனது!
பூப்பூத்த மரமாய் இருந்த
வாழக்கைப் பயணம்
இலையுதிர்ந்து காய்ந்து போன
பட்டமரமாய் மாறிப்போனதோ?
துரத்தும் நினைவுகளின்
வேகங்கள் மேகங்களாக
நிறுத்தும் வழியின்றி
பின் தொடர்கிறது மனது!
இரவுகள்தோறும் கனவுகளாய்
கரைந்துபோய் விடுவதால்
நிஜங்களும் போலிகளோ என
எண்ணித் தவிக்கிறது மனம்!
நீ இல்லாத எதுவும்
நிஜமில்லை என்றாகும் போது
விடுகதையாய் ஆகிறது வாழ்க்கை
உன் அன்பு ஒன்றே
என்னைச் சுரக்கப் பண்ணும்
ஊற்றுக்கண்ணாய் இருக்கையில்
அதை அடைப்பது முறைதானா?

➤ *மு. பெ. சத்தியநேசன்*



கசக்கி எறிந்த
காகிதத்திலிருந்து
சிதறி விழுந்த
எழுத்துக்களை
கோர்த்துப் பார்க்கிறேன்...
எதுகை மோனைக்கு
கோர்க்கும் போது
மோனை சேரவில்லை...
கஸலுக்கு
கோர்த்துப் பார்த்தால்
காதல் ஒட்டவில்லை...
இடைமடக்கி வார்த்தை மாற்றி
சாயம் பூசினாலும்
அசைக்கு இசையவில்லை...
எரிச்சலாக,
கலைத்துப் போட்ட எழுத்துக்களை
பொட்டலமாய் மடித்து
நீர்நிலையில் எறிந்தேன்...
பொறியென நினைத்து
மீன்கள் தின்று கொண்டிருக்கிறது
ஊறிய காகிதத்தில் இருந்து
நழுவிய எழுத்துக்களை...
பாவம்,
செரிக்க முடியா எழுத்துக்களை
என்ன செய்யுமோ மீன்கள்...

➤ *சதா*



தாம் தரிகிட தா...
ஊழித் தாண்டவம்
உயிரசைத்துப் போகிறது...
அடவுகளுக்கும் அலாரிப்புகளுக்கும்
அடங்காது
தாளக்கட்டுகளைத்
தாண்டி
நர்த்தனமாடுகிறது...
உணர்வுகளின் உச்சியில்
உதிரிகள் எதுவுமின்றி
ஆதியும் அந்தமுமில்லா
ஆரவாரங்கள்...
எந்த வரையறைக்கும்
உட்படாது...
வீரியமாய் வியாபிக்கின்றன..
புரிந்து கொள்ளவியலா
பிரம்மாண்டத்துக்குள்..
சிறு புள்ளிகளாகின்றன..
நிகழ்வுகள்...
மீண்டும்
ஒரு பிரளயக் காலத்துக்குள்
புதைந்துக் கொண்டிருக்கிறது
பூமி...

➤ மதுரா

இருப்பைப் பரவசமாக்கும்
பெருவெளி மனநிலையில்
கொண்டாடிக்கொண்டே இருக்கிறேன்!

பருகப் பருக தீராத போதையாய்
வெற்றிக் கொண்டாட்டத்தில்
நிறைந்திருக்கும்
நம்பிக்கைச் சொட்டுகள்
வாழ்வின் நொடிகளை
துளித் துளியாய் ருசிக்கிறது!

முன்னெப்போதும் இல்லாததைவிட
தோல்வியைக் கொண்டாடுகிறேன்
மன குவளையின்
கடைசிச் சொட்டு நம்பிக்கையும்
ததும்பி வழிந்து
என் இருதயக் கலனை
தன்னுடையதாக்குகிறது!

ஒவ்வொரு வாகைக்கு முன்னும்
பல வலிகளை சூடியவளுக்கு
கொண்டாட்ட மனநிலையின்
மீட்சியில்லா போதையில்
வாழ்தலின் ருசி
அதிகம் இனிக்கிறது!


எல்லா நிலையிலும் கொண்டாடுதல்
பைத்தியக்கார மனநிலைதான்
இருந்தபோதும்
மனக் குவளையில் மீந்திருக்கும்
கடைசிச் சொட்டு நம்பிக்கையும்
வாழ்வியலை நமதாக்கும்போது
கொண்டாடிக் களித்திருத்தல்
பிழையில்லையே!

➤ மின்மினி விமலா



ஒரு தேநீர் ஆறிக்கொண்டிருக்கிறது
பருகுவதற்கு உதடுகளின்றி சுவைப்பதற்கு
நாவின்றி
ஒரு தேநீர் ஆறிக்கொண்டிருக்கிறது
ஆறிக்கொண்டிருக்கும் தேநீரில்
சர்க்கரையான கரும்பும் தேநீரத்தூளான
தேயிலைச் செடியும்
அழுதுகொண்டிருக்கின்றன
மின்சார விசிறிக் காற்றில்
அலைகளையெழுப்பியபடி
விம்மிக்கொண்டிருக்கும் தேநீரைச்
சமாதானப்படுத்த
யாருமில்லை
தேநீரின் வெப்பநிலை குறைந்துகொண்டே
வருகிறது
சற்றைக்குமுன் உயிரிழந்தவனின் உடல்
வெப்பமென
ஏதோ காரணத்தால் நிராகாரிக்கப்பட்ட தேநீர்
தன் ஜீவனையிழுத்துப்பிடித்தபடி காத்திருக்கிறது
யாரேனும் பருகக் கூடுமென
தேடித்தேடிக் காத்திருந்த தேநீர்
தன் இறுதிக் கணங்களில் கண்களை மூடி
தன்னைத் தயாரித்தவரின் கைகளை
நினைத்துப்பார்த்தபடி உயிர்துறக்கிறது
அதே கணத்தில் மலைக்காட்டுத் தேயிலைச்
செடியில்
ஓர் இலை உதிர்கிறது
கரும்புத் தோட்டத்தில் ஒரு கரும்பை
சிறுவனொருவன் ஒடித்துத் திருடிப்போகிறான்
ஒரு பிணத்தைச் சுமந்துகொண்டிருக்கிறது
தேநீர்க்கோப்பை

➤ சௌவி



பார்வையற்ற யாசகன்
கையில் இன்றும்
பழைய புல்லாங்குழல் .

➤ *ராஜிலா ரிஜ்வான்*

பசியற்ற மணித்துளிகள்
பிரபஞ்சத்தை மாற்றியமைக்க
வல்லவை.
பிரஞ்ஞைகளற்றவையும் கூட.

பெரும் வலியொன்றைத் தலையெண்ணிப்
பிரித்துக் கொடுத்தவர்களைப்
பின்தொடர்ந்து பார்த்ததில்
அவர்களனைவரும்
முண்டங்களாகவே புலப்படுகின்றனர்

நலன்களை தீர்மானிப்பதில்
முந்திக் கொண்ட கடும் போதையால்
அவனின் பசி
அவனின் பாதங்களிலேயே
தூண்டப்பட்டிருக்கறது

கொடுங்காலன் ஒருவன் துணைக்களித்த
டார்ச் லைட்டுகளையும்
விளக்குகளையும் காறி உமிழ்ந்தவன்,
ரொட்டிகள் தீர்ந்த இரவொன்றில்
கண்ணீர் துளிகளைச் சேகரித்துச்
சுவைக்கத் தொடங்குகிறான்.
வயிற்றை நிறைத்துக் கெக்கலிக்கிறது
வெறுமை.

➤ *அம்பிகா குமரன்*

## குரல் விற்றுப் பிழைப்பவன்



இசைக் கருவிகளைக் கொண்டு
இசைக்கத் தொடங்குகிறான்.
தனக்குப் பிடித்த கதையொன்றை
பாடல் வழியே
கூறத் துவங்கியதும்
உயிரற்ற பொருட்களெல்லாம்
உயிர் பெற்று அவன் கூறும்
கதைக்கேற்ற பாத்திரங்களாய்
ஆடத் தொடங்கின.
கதையில் நுழைந்த அரசன்
வேண்டிய பொருட்களை
எல்லோருக்கும் தந்து
அழியாத ராஜ்ஜியத்தைப் படைக்கிறான்.
எங்கோ திரண்ட மணற் குவியல்
வல்லூறுவாய் அவன் அழகிய
கண்களைப் கொத்தித் தின்ன வந்தது.
கண்களை விடுவதென்றால்
மக்களை பசிக்குக் கொடுக்க
வேண்டுமென்றது அப்பறவை.
மக்களின் வாழ்விற்காக
தன் கண்களை இழந்தான் அவ்வரசன்
என்ற பாடலோடு அக்கதை முடிந்தது.
விரித்த துண்டில்
காசுகள் விழுந்தன
தன் வீட்டின் வயிற்றை நிரப்பப்
போதவில்லையெனினும்
நாளை இன்னொரு
கதையொன்றுக்கு
அச்சாரமாய்.

➤ அன்றிலன்

## கடவுளின் தொலைந்த முகவரி



ஊரின் பழம்பெரும் வேப்பமரமொன்றில்
சக்தி வாய்ந்த கடவுள் இருப்பதாக
நம்பப்படுகிறார்
வாரமிருமுறை
வேட்டைக்குச் செல்லுமென்றும்
எதிரே வருபவர்களை
அடிச்சுடும்னும் சொல்வார்கள்
கடவுளையோ
கடவுளைப்போல் யாதொன்றையோ
அவ்விடத்தில்
இதுவரை கண்டதில்லை
ஆனாலும்
உணர்ந்திருக்கிறேன்
அர்த்த ஜாமங்களில்
மல்லிகையோடு சேர்ந்த
சாம்பிராணி வாசனை கமழ்வதை
உறுமி அதிர
சலங்கைச் சத்தங்கள்
காதைப் பிளப்பதை
எழுந்து பார்க்கப்
பிரயத்தனப்பட்டும் முடிந்ததில்லை
ஒருநாள் எட்டுவழிச் சாலைக்காக
நிலம் கையடுத்தப்பட்டபோது
கடவுள் நாடுகடத்தப்பட்டார்
களவு போன கடவுளைத்தான்
இப்போது தேடிக்கொண்டிருக்கிறேன்
சில நாட்களாகவே
வேட்டைக்குச் செல்லாமல் அவரின் பசி
ஒரு காடளவு முளைத்திருக்கும்
தெரிந்தால் யாரேனும் சொல்லுங்களேன்
தொலைந்துபோன அவரின் முகவரியை

➤ பிறைநிலா

## ஈரம் பூக்கும் கண்கள்



வெறும்பய வந்துட்டான்னு
மாமியா சொல்ல கொஞ்சம்
முகம் மாறி சட்டென புன்னகைத்து
உள் நுழையும் அப்பாவின்
கையில்
சாக்கு மூட்டை இருக்கும்

அப்பா டீ தண்ணி சாப்பிடுறீங்களா என்ற
கேள்விக்கு
வேணாம்மா
வாற வழியிலதான் பசியாறினேன்னு
கிளம்பி போகும் அப்பாவின்
கண்களில் ஈரம் பூத்திருக்கும்

என்ன கொண்டு வந்தாரு
ஒங்கப்பான்னு
மூட்டைய கொழுந்தியா பிரிக்க
மொத வந்து விழும்
மாமியாவுக்கான வெத்தல டப்பாவும் வெத்தல
கட்டுமா

மாத தேவைக்கான காய் கறியும்
தீனியும் எனக்கு மட்டுமே
தெரியும் அப்பாவின் அன்புமா
நெறைஞ்சு கெடக்கும்

பொத்தி பொத்தி வளத்த
அப்பாவ கூணி குறுகி நடந்து போக
வந்திருக்க கூடாதுதான் எனக்கு இந்த பாழா
போன காதல்......

➤ *கதிரவன் வீ*

இங்கிருந்து அண்ணா தெருவுக்கு
கடைவீதி வழியாக நடந்து போக
கால் மணிநேரத்திற்கு மேலாகும்.

எளிதானது சந்துவழிதான் என்றால்
வழியோரம் மலஜல நாற்றத்தையும்
தரைமுழுதும் உடைந்த சாராய
குப்பியின் சில்லுகளையும்
குடலைப் பிடுங்கும் குப்பைவாடையையும்
தெருநாய்களின் குரைப்புகளையும்
யாரைப் பார்த்தாலும் அடிக்கவரும்
மனநலம் குன்றியவனையும் சகஜமாக
ஏற்றுப்பழகிக்கொள்ள வேண்டியதாயிருக்கிறது.

சுவற்றில் படிந்துள்ள பான்பராக்
எச்சில் கேட்கிறது...
'குறுக்கு வழி மட்டும் என்ன
அவ்வளவு சுலபமா?'

➤ தி.கலையரசி



வெட்சிப்பூ சூடி ஆநிரை
கவரவும் இல்லை..
கரந்தை சூடி ஆநிரை மீட்கவும்
இல்லை..
வறண்ட பாலை தாண்டி
சுதி சேர்க்கும் வெயிலுக்குத்தோதாய்
தன் வாழ்க்கைப்பாட்டை
கானமாய் இசைத்தபடியே
போகிறார் இவர்..
தன் ஆவினங்களுடன்..

➤ விஜய் ஆனந்த்



ஓடியோடி செய்திகளைப் பறித்துக்
காமிராவிற்குள் கருணையைக்
கொலை செய்வது வாடிக்கையாகிறது!

நிகழ்காலம் என்பதைப் பற்றிய பசி
அதிகாரத்தின் அட்டைகளுக்குப் புரிவதில்லை!

அவர்களோதும் தோத்திரங்கள்
முதலைகளுக்குச் சோத்திரங்களை விழுங்கிக்
குபேர லோகம் விரிகிறது!

அகராதித் திருத்துகின்றவன்
கருணையைக்
கொலையென்றே மொழி பெயர்க்கிறான்!

எல்லைகளை வகுத்த கோடுகள்
புலம் பெயர்கிறவனின் கால் வெடிப்புகளில்
தினமும் அழுது கொண்டிருக்க...
தீப்பிடிக்கும் குடிசைகள்
சாதாரணனின் குறியீடென்று யாருக்குத்
தெரியும்?

யன்னல்களை அடைத்துவிட்டு
சுத்தமான காற்றைச் சுவாசியென்பவனின்
கால்களுக்குத் தீவைத்துவிட்டு
இதுதான் ராஜ நடையென்று சொல்லும் நாளில்

சுத்தமான காற்று
புவியின் சுகசீவனத்தில் பரவி விரவலாம்!

➤ *முகமது பாட்சா*

அலுவலக
பிரச்சனையொன்றின்
உச்ச உளைச்சலிலிருந்த
போதுதான் மீம்ஸ்ஸிக்கான
சிரிப்பு ஸ்மைலியை
அழுத்த வேண்டியதாயிற்று..
வெளிக்காயமின்றி கொலை
செய்வதெப்படியெனும்
மும்முரகூகுளின்போது
குறுக்கிட்ட இதயதின
கூட்டுச்சுயமிக்கு கிரிம்சன்
இதயத்தை அழுத்த வேண்டியதாயிற்று..
அந்த அரசியல் பதிவுக்கு நான்
அழுத்திய குரூரமுக ஸ்மைலி
நிசத்தில் என் கலவியை கலைத்த
நோட்டிஃபிக்கேஷன் சத்தத்திற்கானது..
இப்படித்தான் அன்றாடம்
அழுத்திடும் நீலதம்ஸ்ஸப் ஸ்மைலிகளை
தலைகீழாய் திருப்புவதற்கான
முயற்சியை வழிவகுத்தன
பல கவிதைகளும் ஸ்மூயூல்களும்..
நேரில் சென்றால் ஒரு
துளியும் சொட்டாது
இப்படியாகத்தான் இரட்டைத்துளி
அழுஸ்மைலியில் தப்பிவருகிறேன்
ஒவ்வொரு இரங்கல் செய்திக்கும்..
வாய் மூடித்தான் இருக்க
வேண்டுமென்றில்லை
வாய்பிளந்த அவ்வாச்சரிய
ஸ்மைலியைப்போலவும்
இருக்கலாம் என் ஒவ்வொரு
முணுமுணுப்புகளும்..
இப்படியாகத்தான்
பயணிக்கிறது
என் நிசமுகமும்
பல பொய்
பொம்மை முகங்களும்.

➤ *ஆனந்த்*

## நான்_திரும்பிவிட்ட_நிலம்



நான் விரும்பிய நிலத்தை அடைந்திருக்கிறேன்
யுக யுகமான பசிய நிலம்

வட்டக் குடிசைகளுள்
செம்பட்டை முடிச் சிறார்களின்
அடுப்பு கனன்றிருக்கின்றது

விழாக்கால பின்னிரவில்
சிறுமியொருவள் தன்னந்தனியே
தெருவாசலில்
கோலமிடுகிறாள்

பேறுகால யுவதிகள்
இறங்கும் பொழுதிற்குள்
சுடர்தொளிர்கிறார்கள்

கணவன்மார்களின்
மனத்தில் மலைத் தேனீக்கள்
சிறகடிக்கின்றன

வான் நீலம் வனையும் பாதையில்
நிழல் பூக்கள் மலர்ந்து
நீள்கின்றன

சுழித்தோடும் ஆற்றின்
ஈரக் கரைகளில் ஆமைகள் கூடி
அடைகாக்கின்றன

நான் கனவின் முற்றத்தில் ஒரு
இளஞ் சூரியனை ஏற்றி வைக்கிறேன்

➤ *சுஜய்_ரகு*



நான் முளைத்தேன்.
பிறகொருநாள் இறகுகள் விரிய என் மேல்
வந்து அமர்ந்தாய்.
நம்மோடு
வசந்தகாலம் பிறந்தது.
ஒவ்வொரு கிளைகளிலும்
பச்சைகள் பூத்தது.
கிளையடி மணலும் வாசத்தை சூடிக்கொண்டது.
பெருங்காற்றில் இலைகளோடு பூக்களும்
உதிர்ந்தது.
சில பொழுதுகள் கடந்து
நீயும் இல்லை,
பாடல்களும் இல்லை.
இப்பொழுதெல்லாம் மழைகாலம் எனக்கு
வெளியே
வருவதும் செல்வதுமாய் இருக்கிறது.

➤ *க.ராஜகுமாரன்*

ஒரு குழந்தையின் லாவகத்தோடு மடிமீது
வந்தமர்கிறது இரவு..

இருவருக்குமிடையில் ஒரு இசையைப்போல
மௌனம் மலர்கிறது..

மௌனத்தின் பேருடலை உடைத்துத்
துளிர்க்கிறது சொற்கள்..

பிரிவின் வாதையை
துயர்மிகுந்த சொற்களை உன்முன்
பிதற்றிக்கொண்டிருக்கிறது காலம்..

காலத்தின் கனதியினை உனையணித்த
எனதுநிலத்தில் பதியமிடுகிறேன்..

நீலநிறத்தில் உனது கடல் எனதுயிரில்
அசைகிறது..

இப்பெருவெளியில் ஆன்மாவை எங்கோ
இழுத்துச்செல்கிறது
உனது ஞாபகம்..

கண்ணீரும் புன்னகையும் சமனித்துக்கிடக்கும்
இந்த இரவின் கைகளுக்குள் நீ
நிறைந்திருக்கிறாய்..

உன்னால் நேசிக்கப்பட்டேன் எனும்
ஆத்மதிருப்தியில் காற்றில் அலைவுறும்
மனதின் பெரும்மயக்கத்தை ஒரு மலைக்குருவி
சுமந்து செல்கிறது..

தூரத்தில் நினைவுகளில் வாலின் நுனியில்
ஒரு வெளிச்சம் எரிந்து கொண்டிருக்கிறது..

அதன் ஒளியில் கரைந்து விடிந்தது இரவு..

➤ *நுஆல் பாத்திமா*



பிரிந்த பிறகு
எங்கு போய்ச்
சேர்ந்தால்
எனக்கென்ன
நான் குளித்த
நதி?

➤ *கோ.வசந்தகுமாரன்*

மனைவி நிறைமாத
கற்பிணியாய் இருந்தாள்
மாடு போடு சினையில் இருந்தது
அவள் மாதுளம்பழமுண்பாள்
அது மாதுளைத்தோல் உண்ணும்
அவள் வாழைப்பழம் உண்பாள்
அது வாழைப்பழத் தோலுண்ணும்
இருவருமே பிரசவித்தனர்
மாடு அழகான காளைக்கன்றை ஈன்றது
மனைவி அதை விட அழகாய்
ஒரு பெண்குழந்தையை பெற்றெடுத்தாள்
கன்று உடனே நடக்கத் துவங்கியது
மகளை நான் தூக்கி சுமந்தேன்
அடுத்தாவது இந்த மாடு கிடாரி
போடுதானு பாத்துட்டு வித்திடனும்
என அம்மாவும்
அட மாடு கெடக்குது அத விடு
மருமகளுக்கு அடுத்த புள்ளையாவது
ஆம்புள புள்ள பொறக்குமானு பாரு
என அப்பாவும் சொல்ல
நான் கன்றுக்குட்டியையும்
பப்புகுட்டியையும் கொஞ்சியபடியே
சிரித்துக்கொண்டிருந்தேன்!

➤ *பௌமக் அருள்*

சொல்லமுடியாமல்
மொழி தேடியலையும்
அதே பரிதவிப்பு
பச்சிளஞ் சிசுவிற்கும்
தேர்ந்த கவிஞனுக்கும்

பால்வற்றிப்போன எரிச்சலினும்
வலி மேலோங்கிய வன்கலவி
சொற்கள் தொலைத்தது


பகிரங்க நிராகரிப்பினும்
சொற்தீர்ந்த வெற்றுரையாடல்
பாழும் மண்டபத்தின் எதிரொலி

நேசம் வறண்டபின்னான உடனுறைதலில்
பொன்குடமுடைத்த மருமகள்

மென்னியிறுக்கும் சொற்களும்
கண்களுறிந்துகொள்ளத் திணறும் நீர்மையும்
கொட்டித்தீர்க்க மடியேந்தும்
சூன்யக் கருந்துளை.

➤ *காயத்ரி*

## இதயம் சற்று இளைப்பாறட்டும்..



எதுவுமே இல்லாமல்
என் அருகில்
அமர்ந்தது அந்தப்பறவை
அதற்கு வயதாகிவிட்டது
ஆனாலும் பறந்துதான் ஆகவேண்டும்
பறத்தல் இன்றும் இளமையாகவே இருக்கிறது
அந்தப்பறவைக்கு.

எண்ணெய் பிசுக்கேறிய மஞ்சள் கயிற்றில்
தொங்குது தாலி
அதற்குத் துணையான
இரு குண்டுகளும்...
தாலி கோர்க்கும் போது
அம்மா வீட்டில் போட்ட
காசுகளும்..
எப்போதே போய் விட்டது
சராப்புக் கடைக்கு..
இதையாவது விட்டு வைப்பானா..
உன் புருசன் னு..
மூக்கைச்சிந்தி கண்ணீர் வடிச்ச எங்கம்மா..
இப்ப எங்கழுத்தில்
தொங்கற பித்தளை தாலிக்கு
தினம் சீயக்காய் பொடி குளியல்னு
கண்டுபிடிக்கும் வரை
இளைப்பாறட்டும்
அவளது இதயம்..

➤ பரமேஸ்வரி சண்முகம்

காற்றோடு இசைத்த
அதன் இறகில் என் ஒரு துளி
மூச்சுகாற்றை
அனைத்து கனிந்தது
அதன் சிறகு.

சிறகு வரைந்த கடிதத்தில்
முதல் வார்த்தை பறக்க ஆரம்பித்து
உதிர்தலில் முடிந்துவிடுகிறது
அதன் இறுதி வார்த்தை.

புதுப்பறவையொன்று தன்கூட்டில்
முட்டைகளை அடைகாத்து
எவ்வாறு பறப்பது என்பதை
அதன் கூடுகளில் எழுதிகொண்டிருக்கிறது.
இன்றும் பெண் பறவை ஒன்று அச்சப்பட்டு
கூடுகளில் இன்னும் முடங்கிதான்
கிடக்கிறது.

➤ ப.தனஞ்ஜெயன்

**இருவர்**




உனது டைரியில் எழுதி வருகிறேன்
எனது நாட்குறிப்புகளை.
உனது டைரி முழுவதும்
எனது கையெழுத்து,
உதடுகளைச் சுழித்து என் எழுத்துக்களை நீ
வாசிக்கையில்
லேசான தூறலில் குப்பை மேட்டிலிருந்து எழும்
சாம்பலாய்
உனது டைரியிலிருந்து எழுகிறது
வியர்வையின் ,கண்ணீர்.
அழுகிய முட்டையை வேக வைத்துத் தீய்த்தது
போன்ற
கசப்பும் புளிப்புமான அனுபவங்களின்
பிரதிபலிப்பில்
என் உருவம் எங்கோ தட்டுத் தடுமாறி
நடப்பதை
நட்சத்திரங்கள் பார்த்து உனக்குச் சொல்கின்றன.
டைரிக்கு வெளியே
துளித் துளியாக வலுக்கத் தொடங்கும் மழை
பல நூற்றாண்டுகளுக்குத் தொடர்ந்து
பெய்கையில்
இணைந்து நனைகிறோம் நீயும் நானும்.
ஆழமாய்க் கிழிந்து ஆறாத காயம்போல்
இன்னமும் குருதி கசியும்
டைரிக்கு உள்ளே
நீயும் நானும்

➤ *இந்திரன்*

## மூச்சுடைந்த புன்னகை



இரக்கமற்ற கோடையென
பிரபஞ்ச இருள் படர்ந்த சோக மேகம்
வயிற்றிலிருந்து புறப்பட்டு
நெஞ்சை நோக்கி சஞ்சரித்துக்
கொண்டிருக்கிறது..

புன்னகை புதைந்த கல்லறையாய்
மனமெங்கும்
பயத்தின் படலம் படர்ந்து
இரவின் ஓரங்களில் வெறுமை கசிந்து
கொண்டிருக்கிறது....

பின்னிரவுகளில் விழித்துக் கொள்ளும்
மௌனத்தின் பேரிரைச்சல்கள்
கனன்று கொண்டிருக்கும் கண்களை
கௌவிக் கொள்கிறது

ராஜாளியின் கற்பனைக் காட்டிலே
தீர்ப்பை எழுதி விட்டு
தொடரும் உன் கடும் விசாரணை
எரியும் ஓர் போர்க்குணத்தில்
ஊறி வந்த கண்ணீருக்குள் மூழ்கி
இயதத்தை பாறையாய்
செதுக்கிக் கொண்டிருக்கிறது....

- *மிஸ்ரா ஜப்பார்*

ஊதி ஊதி உண்டு மகிழலாம் என்றுதான்
போட்டுக் கொண்டோம் உடன்பாடு
உட்கார்ந்து திறந்த பின்னர்தான் தெரிந்தது
இருவர் பொதிகளிலுமே உமிதானென்று .

- *சுபிரா*

**வனம்**



காடொன்று வரைய
துவங்கினேன்...

வண்ண வண்ண
பென்சில்கள் அணிவகுத்து
சிறு மரங்களை
நினைவுபடுத்தின..!

பென்சில் சீவுகையில்
மரத்தின் இரத்தம்
விரல்களில் வழிய
துவங்கியது..!

உடைந்த பென்சில் முனை
பறவைகளின்
மூக்குகளாக வடிவமைந்தன..!

யானை வரைகையில்
பென்சில் அங்குசமானது..!

வண்ண பிசுபிசுப்புகளில்
சிங்கம் புலி கரடி
வரைய...காகிதமே
பெருங் காடானது..!

பசுமை காடு
வரைந்த மகிழ்வில்
கூட்டி...பெருக்கி
அள்ள துவங்கினேன்..!

இரு கரங்களுக்குள்
அடங்கி போனது
பென்சில்கள் உதிர்த்த
காட்டின் சாம்பல்..!

➤ *வே.மு.ஜெயந்தன்*

ஆம்...
ஒற்றை மழைத்துளிக்கு
தவமிருக்கும் பாலைவனத்து
பாறை விதையாய்...
இன்றும் நீள்கின்றன
என் எதிர்பார்ப்புகள்...

என்னை ரத்தவிளாறாக்கிய
உன்னுடனான எதிர்பார்ப்புகளின்
சிநேகம் இன்றளவும் நீள்கின்றன...

தூக்ஷிக்கப்பட்ட பொழுதுகளும்
மௌனத்தால் வெட்டிவீழ்த்தப்பட்ட
இன்னலம் குன்றிய என் இரவுகளும்
இன்றளவும் இம்சிக்கின்றன...

அர்த்தமுள்ள புரிதல்கள் நம்மிடையே
உண்டெனினும்...
அவையாவும் மௌனத்தால்
நிரப்பப்படுவதேன்?



ஒற்றை வார்த்தையில்
சிதறுண்ட நான்
சற்றும் மீளவில்லை...

ஏமாற்றங்கள் அனைத்திற்கும்
அபிலாக்ஷைகளே காரணமென்ற
தாத்பரியம் எல்லாம்
மனதிற்கு எட்டவேயில்லை...

சிறிதும் ஆசுவாசமின்றி
அலைகிறேன்...
அன்றைய நானாக...
இன்றும்!

என் இலக்குகள்
என் தேடல்கள் யாவும்
விரக்திக்கும் ஏமாற்றங்களுக்கும்
சளைத்தவையல்லவே!!

ஆதலால் படபடப்புகளின்றி
நீள்கிறது பயணம்...

➤ *கலை*



விடுபட்டுப் போன ஞாபகங்களில் ஒன்று
இடைச்செருகலில்
ஆழத்தில் இறங்கிய புயல்
மெல்லச் சுழன்ற பொழுதொன்றில்
இலைகளை உதிர்த்துவிட்டு
நிமிரத் தொடங்கியிருந்தது மரம்
காய்ந்த இலைகளைப் பெறுக்கிக்
கொண்டிருந்தோரின்
விசித்திரப் பார்வைகளில் நின்றிருந்தது விழி

பெருநாள் கடக்கும் நெடுஞ்சாலை
வாகனங்கள்போல்
சிக்கிய நேரங்களில்
சிதறிப் போயிருந்தன வார்த்தைகள்
ஒவ்வொருவனும் ஓர் உலகத்தில் மிதக்க
உடைந்துபோன பாதைகளின் விரிசல்களில்
எறும்புகள் ஊர்ந்து கொண்டிருந்தன
எரிச்சல்களுடனும் விரக்திகளுடனும்
சாலைகளைச் சபிந்திருந்தோர் மத்தியில்
எறும்புகளோடு நானும் ஊர்ந்து
கொண்டிருந்தேன்

➤ *முனியாண்டி_ராஜ்*

*காட்சி 1:*

பக்கத்துக் குடிசையின்
அழுகுரல் இரவை
நனைத்துக்கொண்டிருக்கிறது

*காட்சி 2:*

யாரோ துரத்துகிறார்கள்
மரண பயத்தில் நாய்களும் பூனைகளும்
என்னைக்கடந்து ஓடுகின்றன
அவை என் நிறத்தில்
இருக்கின்றன...
கருமையாய்

*காட்சி 3:*

தாய் யானையாக மாறி
பசியோடு சுற்றித் திரிகிறேன்
கற்பப் பையில்
உறங்கும் குழந்தையோடு...
மீண்டும் அந்த யாரோ
எனக்கு மரணக் கனி
ஊட்டுகிறார்கள்

*காட்சி 4:*

மீண்டும் பசி
மீண்டும் மிண்டும் இழுக்கிறேன்
கந்தல் சேலைக்குள் சுருண்டு கிடக்கும் அம்மா
இன்னும் எழவேயில்லை

*காட்சி 5:*

கல்லறைகளில்
வாடிய பூங்கொத்துகளோடு
வரிசையாக நிற்கிறார்கள்
பல வண்ணக் குழந்தைகள்

➤ *ம.கனகராஜன்*



நீயும் நானும் அப்போதெல்லாம்
மழைக்குருவியின் கீச்சொலி உரச
மழைக்கான ஆயத்தங்களோடு
உடன்படிக்கை செய்திருந்தோம்.

நிலத்தை கடலெனவும்
கடலினத்தை அடவியெனவும்
மனத்தோல் போர்த்தாத ஆன்மத்தை
நிழலெனவும் கொண்டு..

உயிர் வாழக் கற்றுக் கொண்டிருந்தோம்.

உலகம் சுருங்கி கைக்குட்டையான போது
விழிப் பிடியினின்று நழுவிய
பேரன்புத் துளிகளை
அத்தனைப் பிரியமாய்
பத்திரப்படுத்தியிருந்தோம்.

உனது சொல்லின் திரட்சியில்
நான் மட்காத எழுத்துக்களை
புலரச் செய்து கொண்டிருந்தேன்.

நுதலினின்று நழுவிய
உவலொன்றில் பெயரெழுதி
கடறு வரைந்தோம்.

அது..

கனத்த உருவமாய்
நறுந்துளிகளை மெய் போர்த்தியது.

இப்போது...

சிறகுலர்த்துகிறோம்.

வனம்..
கடல்..
நிலம்...
பறவை..

இவை தவிர்த்து
நீயும் நானும் மரணம் தழுவிய
யாவற்றிலும்

அச் சிறகுகள்
தன்னுயிர் வளர்த்துப் பறப்பதை
உனைப் போலவே நானும் காண்கிறேன்.

➤ ஜே.ஜே.அனிட்டா

பதிவு எண் : 521/2018

தமிழக காவல்துறை மற்றும்
படைப்புக்குழுமம் இணைந்து நடத்தும்

# மதுவிலக்கு விழிப்புணர்வு குறும்பட போட்டி-2020

## விரைவில்



போட்டி நடுவர்

இயக்குனர் **கே. பாக்யராஜ்**

**பரிசு**

**1,50,000**

கால அளவு

**8- நிமிடங்களுக்குள்**

கடைசி நாள்

**பின்னர் அறிவிக்கப்படும்**

அனுப்ப வேண்டிய முகவரி

Padaippu Media Networks, #23 Third Floor, Aarthi Arcade,
R.K. Salai, Mylapore, Chennai - 600 004